



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜுமுஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ஷஃபான் பிறை 27 ஹிஜ்ரி 1437
Friday of Sha'ban 27th Hijri 1437
3rd June 2016

| | |
|---|---|
| தலைப்பு: | யா அல்லாஹ்! ரமளான் பிறையினால் எங்களுக்கு இறைநம்பிக்கை மற்றும் மன உறுதியை தந்தருள்வாயாக! |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | யா அல்லாஹ்! ரமளான் பிறையினால் எங்களுக்கு இறைநம்பிக்கை மற்றும் மன உறுதியை தந்தருள்வாயாக! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் கண்ணியமும் கிருபையும் நிறைந்தவன். ரமளான் மாதம் நோன்பு வைப்பதை நமக்கு கடமையாக்கியுள்ளான்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:183)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

“நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. (அதனால்) நீங்கள் இறை அச்சமுடையவர்களாக ஆகலாம்”

**முஸ்லிம்களே**! இன்னும் சிறிது நாட்கள் கழித்து ரமளான் பிறையை அடைய இருக்கிறோம். அதனை வரவேற்பதற்கு உற்சாகத்தோடு காத்திருக்கிறோம். பிறையை கண்டவுடன் நோன்பை தொடங்கிவிடுவோம். யா அல்லாஹ்! எங்கள் அனைவருக்கும் ரமளான் பாக்கியத்தை தருவாயாக, ரமளான் மாதம் முழுமையையும் எங்களுக்கு கிடைக்கச் செய்வாயாக, இந்த மாதத்தில் எங்களை ஏற்றுக் கொள்ளப்பட்ட அடியாராக ஆக்குவாயாக, இந்த மாதத்தின் ஆரம்பத்தில் ரஹ்மத் எனும் இறையருளையும், நடு பகுதியில் மன்னிப்பையும், மாத இறுதியில் நரக விடுதலையையும் எங்களுக்கு நீ வழங்குவாயாக!!!

இந்த சங்கையான மாதத்தை இன்முகத்தோடு வரவேற்போம். மிக பூரிப்போடு திழைத்திருப்போம். ரமளான் மாதம் வருவதை கண்டு நமக்கு ஏன் மகிழ்ச்சி இருக்காது?

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய சஹாபாக்களுக்கு உற்சாகமூட்டும் விதமாக இந்த ரமளான் வருகையை பற்றி கூறுகிறார்கள்:

أَتَاكُمْ رَمَضَانُ، شَهْرٌ مُبَارَكٌ، فَرَضَ اللَّهُ عَلَيْكُمْ صِيَامَهُ، تُفْتَحُ فِيهِ أَبْوَابُ السَّمَاءِ، وَتُغْلَقُ فِيهِ أَبْوَابُ الْجَحِيمِ، وَتُغَلُّ فِيهِ مَرَدَةُ الشَّيَاطِينِ، لِلَّهِ فِيهِ لَيْلَةٌ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ، مَنْ حُرِمَ خَيْرَهَا فَقَدْ حُرِمَ

“உங்களிடம் ரமளான் மாதம் வந்திருக்கிறது, நற்பாக்கியம் நிறைந்த மாதமாகும், நோன்பு வைப்பதை அல்லாஹ் உங்கள் மீது கடமையாக்கியுள்ளான், வானத்தில் உள்ள கதவுகள் (அனைத்தும்) திறக்கப்படும், மேலும் அதிலுள்ள நரக வாசல்கள் (அனைத்தும்) மூடப்படும், ஷைத்தான்களுடைய நடவடிக்கைகள் இந்த மாதத்தில் கட்டுப்படுத்தப்படும். அல்லாஹ்விற்காக ஆயிரம் மாதங்களை விட சிறப்பான ஓர் இரவு இந்த மாதத்தில் உள்ளது, யார் இந்த இரவின் பாக்கியத்தை தவறவிடுகிறாரோ நிச்சயம் அவர் (அனைத்து நன்மைகளையும்) தவறவிடுகிறார் (النسائي: 2427)

யா அல்லாஹ்! ரமளான் மாதத்தின் பாக்கியத்தை எங்களுக்கு தவறச் செய்துவிடாதே!! வருடத்தின் மற்ற மாதங்களை விட இந்த ரமளான் மாதத்திற்கு ஏன் இவ்வளவு சிறப்புகள் என்பது உங்களுக்கு தெரியுமா? காரணம் ரமளான் மாதம் பாவங்களை சுட்டெரிக்கும். அதாவது, பாவங்களை அழித்துவிடும் பின்னர் மற்ற நன்மையான அமல்கள் மூலம் அவற்றை எரித்துவிடும். (تاج العروس رمض : (365/18)، القرطبي 291/2)

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ صَامَ رَمَضَانَ إِيمَانًا وَاحْتِسَابًا، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ

"ரமளானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்ததும் நோன்பு நோற்கிறவர் (அதற்கு) முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்!!" (متفق عليه)

ரமளான் மாதத்தில் அடியார்கள் விடுவிக்கப்படுவார்கள், துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ لِلَّهِ عُتَقَاءَ فِي كُلِّ يَوْمٍ وَلَيْلَةٍ، لِكُلِّ عَبْدٍ مِنْهُمْ دَعْوَةٌ مُسْتَجَابَةٌ

“ஒவ்வொரு நாள் பகலிலும் இரவிலும் அல்லாஹ்வால் விடுவிக்கப்படும் அடியார்கள் உள்ளனர். அந்த அனைத்து அடியார்கள் செய்யும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன” ( أحمد:7450، وقال الحافظ ابن حجر في أطراف المسند: (203/7) يعني في رمضان

யா அல்லாஹ்! எங்களை நீ விடுவிப்பாயக!! எங்களுடைய துஆக்களை ஏற்றுக் கொள்வாயாக!!! புனித ரமளான் மாதத்தில்தான் திருக்குர்ஆன் இறங்கியது. பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (2:185)

شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ

“ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய)தென்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டும் திருக்குர்ஆன் (என்னும் வேதம்) இறக்கப்பட்டது. அது (நன்மை, தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடையதாகவும் இருக்கிறது”

இந்த மாதத்தில் புனித லைலதுல் கத்ர் இரவு உள்ளது. இதனைப் பற்றியும் அல்லாஹ் கூறுகிறான்: (97:1-5)

إِنَّا أَنزَلْنَاهُ فِي لَيْلَةِ الْقَدْرِ* وَمَا أَدْرَاكَ مَا لَيْلَةُ الْقَدْرِ* لَيْلَةُ الْقَدْرِ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ* تَنَزَّلُ الْمَلائِكَةُ وَالرُّوحُ فِيهَا بِإِذْنِ رَبِّهِمْ مِنْ كُلِّ أَمْرٍ* سَلامٌ هِيَ حَتَّى مَطْلَعِ الفَجْرِ

“நிச்சயமாக நாம் இந்தக் குர்ஆனை (மிக்க கண்ணியமுள்ள) லைலத்துல் கத்ர் என்னும் ஓர் இரவில் (முதலாவதாக) இறக்கி வைத்தோம். (நபியே!) அந்தக் கண்ணியமுள்ள இரவின் மகிமையை நீங்கள் அறிவீர்களா? கண்ணியமுள்ள அந்த இரவு ஆயிரம் மாதங்களைவிட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும், ஜிப்ரயீலும், தங்கள் இறைவனின் கட்டளையின் பேரில் (நடைபெற வேண்டிய) எல்லா காரியங்களுடன் இறங்குகின்றனர். ஈடேற்றம் உண்டாகுக! (அவ்விரவின் இச்சிறப்பு) விடியற்காலை உதயமாகும் வரை (நீடிக்கிறது)”

ஒரு நோன்பாளி நோன்பு திறப்பதற்கு வசதி செய்து கொடுத்தால் அந்த நோன்பாளியின் கூலியைப் போன்ற கூலி கிடைக்கும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ فَطَّرَ صَائِمًا كَانَ لَهُ مِثْلُ أَجْرِهِ، غَيْرَ أَنَّهُ لاَ يَنْقُصُ مِنْ أَجْرِ الصَّائِمِ شَيْئًا

“யார் ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்க ஏற்பாடு செய்து கொடுக்கிறாரோ நிச்சயம் அவருக்கு அந்த நோன்பாளியின் கூலியை போன்ற கூலி கிடைக்கும். அதே சமயம் அந்த நோன்பாளியின் கூலியில் இருந்து எந்த குறைவும் ஏற்படாது” (807 : الترمذي)

**ரமளான் மாதத்தை பெற்றவர்களே**! இந்த ரமளானை நன்றாக பயன்படுத்திக் கொள்வது எப்படி? ரமளான் மாதம் மேன்மை நிறைந்த மாதமாகும். நோன்பு வைப்பது மார்க்கத்தின் கட்டாய கடமையாகும். இவ்விதம் தகுதி உள்ளவர்கள் கட்டாயமாக நோன்பு வைக்க வேண்டும் என்று அகில உலக இறைவன் உத்தரவிட்டுள்ளான்: (2:185)

فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ

“ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும்”

அதாவது ஒருவர் ரமளான் பிறையை அடைந்து கொள்கிறார் மேலும் அவர் உடல் ரீதியாக ஆரோக்கியமாகவும் இருக்கிறார், அப்போது அவர் நோன்பு வைப்பது கட்டாய கடமையாகும் ((503/1) : تفسير ابن كثير)

பிறை தென்பட்டதை உறுதி செய்துவிட்டால் நோன்பு வைப்பது கடமையாகும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

صُومُوا لِرُؤْيَتِهِ وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ

"பிறையைப் பாத்து நோன்பு வையுங்கள்; பிறையைப் பார்த்து நோன்பு விடுங்கள்!" (متفق عليه)

பிறை தென்படுவதை பற்றி தேசிய ஷரீஅத் கூட்டமைப்பு உறுதி செய்து அறிவிப்பை வெளியிடும். இந்த நேரத்தில் நாம் பின்வரும் துஆவை ஓதிக் கொள்ள வேண்டும். யா அல்லாஹ்! எங்களுக்கு இந்த பிறையினால் இறைநம்பிக்கை மற்றும் மன உறுதியையும், அமைதி மற்றும் நிம்மதியையும் தருவாயாக!!. இவ்விதம் நாம் துஆ ஓதும்போது இந்த மாதம் முழுவதும் பேணிக்கையோடு நோன்பு வைப்பேன், மேலும் பல நல்ல அமல்களை செய்வேன் என்கிற உறுதிமொழியோடு ஓத வேண்டும்.

ஒவ்வொரு தொழுகையையும் ஜமாஅத்தோடு நிறைவேற்ற வேண்டும். தராவீஹ் தொழ வேண்டும். இந்த தராவீஹ் தொழுகை இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் காட்டித்தரப்பட்ட முக்கியமான சுன்னத்தாகும். அவர்களை தொடர்ந்து வந்த சஹாபா பெருமக்களும் இந்த தொழுகையை நிலைநாட்டி உள்ளார்கள். யார் இந்த தராவீஹ் தொழுகையை மிக ஆர்வத்தோடு தொழுது வருகிறாரோ நிச்சயம் அவர் அதிகமான நன்மைகளை பெற்றுக் கொள்கிறார். இறை மன்னிப்பையும், வேறு பல சிறப்புகளையும் பெற்றுக் கொள்வார். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَامَ رَمَضَانَ إِيمَاناً وَاحْتِسَاباً، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ

"ரமளானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்ததும் நோன்பு நோற்கிறவர் (அதற்கு) முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்! (متفق عليه)

ரமளானின் ஒவ்வொரு பொழுதையும் பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும். எனவே திக்ர் செய்ய வேண்டும் மேலும் வணக்க வழிபாடுகளிலும் ஈடுபட வேண்டும். ஸஹர் நேரம் வந்துவிட்டால் ஸஹர் உணவை உட்கொள்ள வேண்டும். இதனைப் பற்றி இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ السَّحُورَ بَرَكَةٌ أَعْطَاكُمُوهَا اللَّهُ فَلاَ تَدَعُوهَا

“ஸஹர் உணவை சாப்பிடுவதில் நற்பாக்கியம் இருக்கிறது. அல்லாஹ்தான் அதனை உங்களுக்கு வழங்கியுள்ளான் எனவே அவற்றை தவறவிடாதீர்கள் (23142 :أحمد)

நற்பாக்கியம் என்பது உணவையும் அது உட்கொள்ளப்படும் நேரத்தையும் உள்ளடக்கும். காரணம் ஸஹர் நேரம் இறை மன்னிப்பை பெற்றுத்தரும் நேரமாகும். இவ்வாறு ஸஹர் நேரத்தில் இறைவனிடம் பாவ மன்னிப்பு கேட்பவர்களை இறைவன் புகழ்ந்து கூறுகிறான்: (51:17-18)



www.sunnathwaljamath.com

كَانُوا قَلِيلاً مِنَ اللَّيْلِ مَا يَهْجَعُونَ* وَبِالأَسْحَارِ هُمْ يَسْتَغْفِرُونَ

“அவர்கள் இரவில் வெகு சொற்ப (நேர)மே நித்திரை செய்வார்கள். அவர்கள் விடியற்காலை நேரத்தில் (எழுந்து இறைவனை வணங்கி, தங்கள் இறைவனிடம்) மன்னிப்புக் கோரிக் கொண்டிருப்பார்கள்”

ஸஹர் நேரத்தில் செய்யப்படும் துஆ இறைவனால் அங்கீகரிக்கப்படுகிறது. துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَى حِينَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الآخِرِ كُلَّ لَيْلَةٍ، فَيَقُولُ: مَنْ يَسْأَلُنِي فَأُعْطِيَهُ؟ مَنْ يَدْعُونِي فَأَسْتَجِيبَ لَهُ؟ مَنْ يَسْتَغْفِرُنِي فَأَغْفِرَ لَهُ؟ حَتَّى يَطْلُعَ الْفَجْرُ

“ஒவ்வொரு இரவிலும் அதன் மூன்று பகுதியின் மூன்றாவது பகுதியில் மேலான நம்முடைய இறைவன் இறங்கி வருகிறான். இறைவன் கூறுகிறான், “யார் என்னிடம் கேட்கிறீர்கள்? அவர் கேட்டதை நான் கொடுக்கிறேன். யார் என்னை அழைக்கிறீர்கள்? நான் அவருக்கு பதில் கொடுக்கிறேன். யார் என்னிடம் பாவ மன்னிப்பு கேட்கிறீர்கள்? நான் அவரை மன்னித்துவிடுகிறேன் என்று பஜ்ர் நேரம் தொடங்கும் வரை சொல்லிக்கொண்டிருப்பான்” ( متفق عليه واللفظ لابن ماجه: 1366)

**முஸ்லிம்களே**! ரமளான் மாதத்தின் பகல் பொழுதை நாம் எப்படி பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும்? ஒரு நோன்பாளி ஸுப்ஹ் தொழுகையை ஜமாஅத்தோடு தொழுது தன்னுடைய நாளை தொடங்க வேண்டும். பொதுவாகவே ஸுப்ஹ் தொழுகையை ஜமாஅத்தோடு தொழுதால் இறைவனின் பாதுகாப்பு கிடைக்கும், எதிர்பாராத இடையூறு, திடீரென ஏற்படும் பாதிப்பு, ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ صَلَّى الصُّبْحَ فِي جَمَاعَةٍ فَهُوَ فِي ذِمَّةِ اللَّهِ عَزَّ وَجَلَّ

“யார் ஸுப்ஹ் தொழுகையை ஜமாஅத்தோடு நிறைவேற்றுகிறாரோ நிச்சயம் அவர் கண்ணியமும் மேன்மையும் நிறைந்த அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கிறார் ( مسلم: 657 ، وأبو نعيم في المستخرج على مسلم واللفظ له)

பிறகு முக்கியமான அன்றாட பணிகளில் ஈடுபட வேண்டும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அமல் செய்வதில் ஆர்வம் கொள்ள வேண்டும். ஆர்வத்தோடும், பொறுமையோடும், சிரமத்தோடும் வணக்கங்களில் ஈடுபடவேண்டும் என்று இந்த ரமளான் மாதம் நமக்கு கற்றுத்தருகிறது. உண்மையில் இது நோன்பின் முக்கிய நோக்கமாகும். நோன்பு என்பது உடல் மற்றும் உயிர் ஆகிய இரண்டிற்கும் உள்ள வணக்கமாகும். உணவுகள் சாப்பிடாமல் உடல் கட்டுப்பாட்டோடு இருக்கிறது. பல தீய குணங்களை விட்டுவிட்டு மனம் தூய்மையாக இருக்கிறது. இதனால் புகழுக்குரிய அடியாராக வாழ முடிகிறது. மக்ரிப் பாங்கு சொன்னவுடன் ஓர் அடியார் மிகவும் உற்சாகம் அடைந்து இறைவனிடம் மன்றாடி துஆச் செய்து கொண்டே



www.sunnathwaljamath.com

தனது நோன்பை முடித்துக் கொள்கிறார். ஸஹர் உண்ணும்போது துஆச் செய்ததை போல நோன்பு திறக்கும்போதும் இறைவனிடம் மனமுருகி துஆச் செய்ய வேண்டும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

ثَلاَثَةٌ لاَ تُرَدُّ دَعْوَتُهُمْ: الصَّائِمُ حَتَّى يُفْطِرَ، وَالإِمَامُ الْعَادِلُ– أَيِ الْحَاكِمُ الْعَادِلُ – وَدَعْوَةُ الْمَظْلُومِ

"மூன்று பேருடைய துஆக்கள் (இறைவனால்) நிராகரிக்கப்படாது. 1. நோன்பு திறக்கும் போது நோன்பாளியின் துஆ, 2. நேர்மையான தலைவர் அதாவது நேர்மையான ஆட்சியாளர், 3. அநியாயமாக பாதிக்கப்பட்டவரின் துஆ (ஆகிய மூன்று துஆவும் இறைவனால் நிராகரிக்கப்படாது) (الترمذي : 3598 ، وابن ماجه: 1752)

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பு திறக்கும்போது பின்வரும் துஆவை ஓதுவார்கள்:

ذَهَبَ الظَّمَأُ وَابْتَلَّتِ الْعُرُوقُ، وَثَبَتَ الأَجْرُ إِنْ شَاءَ اللَّهُ

"தாகம் தணிந்தது, நரம்புகள் நனைந்துவிட்டன, அல்லாஹ் நாடினால் நிச்சயம் (இதற்கான) கூலி கிடைக்கும் (أبو داود: 2357)

முழுமையாக பழுத்து உண்பதற்கு மிருதுவாக இருக்கும் மஞ்சள் நிற பேரீச்சம் பழம் மற்றும் தண்ணீரைக் கொண்டே நோன்பை திறக்க வேண்டும். இது ஸுன்னத்தான வழிமுறையாகும், உடலுக்கும் இதும் மிகவும் நல்லதாகும். குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒரே இடத்தில் ஒன்று கூடி அமர்ந்து நோன்பு திறக்க வேண்டும். இதனால் ஒருவர் மீது ஒருவருக்கு அக்கறையும் அன்பும் அதிகரிக்கும், மனதிற்கும் மிக நிம்மதியாக இருக்கும். உறவினர்களையும், நெருக்கமானவர்களையும் அழைத்து ஒன்று கூடி சபைகளில் நோன்பு திறக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஆயுளும் செல்வச் செழிப்பும் அதிகரிக்கும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ سَرَّهُ أَنْ يُبْسَطَ لَهُ فِي رِزْقِهِ، أَوْ يُنْسَأَ لَهُ فِي أَثَرِهِ، فَلْيَصِلْ رَحِمَهُ

"தம் வாழ்வாதாரம் (ரிஸ்க்) விசாலமாக்கப்படுவதும் வாழ்நாள் நீட்டிக்கப்படுவதும் யாருக்கு மகிழ்ச்சி அளிக்குமோ அவர் தம் உறவைப் பேணி வாழட்டும்" (متفق عليه )

ரமளான் மாதத்தில் எண்ணற்ற நன்மைகள் கிடைக்கும். எனவே நாம் ஏன் நமது நேரங்களை வீணடிக்க வேண்டும்? யா அல்லாஹ் எங்கள் அனைவருக்கும் ரமளானின் பாக்கியத்தை தந்தருள்வாயாக! நாங்கள் நோன்பு நோன்பு நோற்று அதிகமாக தொழக்கூடிய அடியார்களாக எங்களை ஆக்கிவைப்பாயாக!! நாளை மறுமையில் சுவனத்தை பெறும் பாக்கியத்தை தருவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள். அவனுக்கு தொடர்ந்து கீழ்படிந்து நடங்கள். அவன் நம்மீது பொழிந்துள்ள கிருபைகளுக்காக


www.sunnathwaljamath.com

அவனுக்கு நன்றி செலுத்துங்கள். நமது ஐக்கிய அரபு அமீரக தேசத்தில் ரமளான் மாதம் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. எங்கும் இறை சிந்தனை நிரம்பி இருக்கும். அனைத்து நோன்பாளிகளும் சிரமம் இல்லாமல் நோன்பு திறப்பதற்காக பல்வேறு இடங்களில் வசதி மிக்க கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பலர் இந்த நற்காரியங்களில் மிக ஆர்வத்தோடு பங்கெடுக்கிறார்கள். பெரும்பாலும் கூட்டாகவே அனைவரும் காணப்படுவர். ஆட்சியாளருக்கும் குடிமக்களுக்கும் உள்ள உறவு வலுப்படுகிறது. ஒரு தந்தையை போன்ற உணர்வில் மக்களுக்கு தேவையான ஏற்பாடுகளை நமது அரசு செய்து கொடுக்கிறது.

இந்த ரமளான் மாதத்தில் பல இஸ்லாமிய விழாக்கள், சபைகள், அரங்கங்கள் நடத்தப்படுகின்றன. இஸ்லாமிய அறிவை வளர்ப்பதற்காகவும், இறை நம்பிக்கையை மேலும் உறுதிப் படுத்துவதற்காகவும், இதயப்பூர்வமான உபதேசங்களை கேட்பதற்காகவும் இந்த ஏற்பாடுகள் உதவுகின்றன. இதனால் நோன்பாளியின் உள்ளம் ஆறுதலடைகிறது, இறைவன் மீது கொண்டுள்ள வேட்கை மேலும் அதிகரிக்கிறது. இதனால்தான் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து அறிஞர் பெருமக்கள் அழைத்து வரப்படுகிறார்கள். அறிவார்ந்த பல சபைகள் நடக்கின்றன. பயனுள்ள பயிலரங்கமும் இயங்குகின்றன. பள்ளிவாசல்களில் எப்போதும் திக்ர்களும், அறிவுரைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. ரமளானின் பலன் உடலுக்கும் மிகக் குறிப்பாக ஆத்மாவிற்கும் நிறைவானதாக அமையும் வண்ணம் இவ்வாறான பல்வேறு ஒத்துழைப்புகள் வழங்கப்படுகின்றன.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின்

மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹூ அன்ஹூம் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள்

தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).